2016 ஆகஸ்ட் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

மேம்பாலம்

***2256 திரு. ஆர். காந்தி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, மேல்விஷாரம்-பாலாற்று மேம்பாலம் கட்டும் பணிகளை விரைந்து முடிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராணிப்பேட்டை தொகுதி, மேல்விஷாரம்-பாலாற்று மேம்பாலம் அமைக்கும் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். காந்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் நல்லாட்சி புரிந்துவரும், தொடர்ந்து முதலமைச்சராக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்ற ஒரே தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) தேனி மாவட்டம், குமுளி* lower camp *அருகே, தேசிய நெடுஞ்சாலையில் கடந்த மழையின்போது ஒரு பள்ளம் ஏற்பட்டு அது மிகவும் அபாயகரமாக உள்ளது. தாங்கள் அங்கே ஒரு புதிய பாலத்தை அமைத்துக் கொடுக்க வேண்டும். காரணம், அந்தத் தேசிய நெடுஞ்சாலையில் ஆயிரக்கணக்கான வாகனங்கள் தினந்தோறும் சென்று வருகின்றன. அந்தச் சாலை*

மிகவும் பழுதடைந்திருப்பதால், உடனடியாக அந்த இடத்தில் பாலத்தைக் கட்டித் தர ஆவன செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேசிய நெடுஞ்சாலையில் பள்ளம் ஏற்பட்ட அந்தப் பகுதியில் ஒரு புதிய பாலம் கட்ட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அதனை ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் தொகுதிக்குட்பட்ட பாணாவரத்திலிருந்து காவேரிப்பாக்கம் செல்லும் சாலை, பொன்னப்பன்தாங்கல் கூட்டு ரோடிலிருந்து பனப்பாக்கம் செல்லும் சாலை, தமிழ்நாடு அரசின் நெடுஞ்சாலைத் துறைக்குச் சம்பந்தமானது. அந்தச் சாலையை சீர் செய்ய அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஒவ்வோர் ஆண்டும் சாலைகளைச் சீரமைப்பதற்காக நிதி ஒதுக்குகிறது. சாலை அமைக்கப்பட்டு 5 ஆண்டுகள் நிறைவுபெறும்போது அந்தச் சாலைகள் சீரமைக்கப்படுகின்றன.*

2016 ஆகஸ்ட் 18]

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலை 5 ஆண்டுகள் நிறைவு பெற்றிருந்தால், அந்தச் சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களைப் பணிவோடு வணங்குகிறேன். என்னுடைய சீர்காழி தொகுதிக்குட்பட்ட அரசூர் இரயில்வே மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு, ஏறத்தாழ 5 ஆண்டுகளுக்கு மேலாகின்ற நிலையிலே, அணுகு சாலைகள் போடும் பணிகள் நிறைவுபெறாமல் இருக்கின்றன. அதற்கு என்ன காரணம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அணுகு சாலைகள் அமைக்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கின்றார்கள். என்ன காரணத்திற்காக அந்தச் சாலைப் பணிகள் நிறைவு பெறாமல் இருக்கின்றன என்பதை ஆய்வு செய்து, கண்டறிந்து, அணுகு சாலை அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.*

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை வணங்குகிறேன். மேலூர் தொகுதி, கருங்காலக்குடி தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் நடந்து*

உயிரிழப்புகள் ஏற்படுகின்றன. அந்தச் சாலையைக் கடப்பதற்கு மிகவும் சிரமமாக இருப்பதால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, கருங்காலக்குடியில் மேம்பாலம் கட்டித்தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருங்காலக்குடி தேசிய நெடுஞ்சாலையில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதால், அந்தப் பகுதியில் ஒரு மேம்பாலம் அமைத்துத் தர வேண்டுமென்ற கருத்தை இங்கே சொல்லியிருக்கின்றார். இது தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தினாலே, தேசிய நெடுஞ்சாலைத் துறைக்குக் கருத்துரு அனுப்பி, அங்கிருந்து நிதி பெற்றுத்தான் பாலம் அமைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எனவே, அதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன் அவர்கள்.*

திருமதி சி. ஜெயந்தி பத்மநாபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுவை புதிது; பொருள் புதிது; வளம் புதிது; சொல் புதிது; நாள்தோறும் அறிவிக்கும் திட்டங்கள் அனைத்தும் புதிது; 'ஜோதிமிக்க நவக் கவிதை எந்நாளும் அழியாத மாக்கவிதை'; என் அன்னை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

குடியாத்தம் நகரத்தில் அதிகப்படியான போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. 'குட்டி சிவகாசி' என்று அழைக்கக்கூடிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளும் மற்றும் அதிகப்படியான பள்ளி மற்றும் கல்லூரிகளும் நிறைந்தது குடியாத்தம் நகராட்சியாகும். அந்த நகரத்திலே புறவழிச் சாலை அமைக்க வேண்டுமென்பது அந்தப் பகுதி மக்களின் நீண்ட கால வேண்டுகோளாக இருக்கிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில்,

அந்தப் பகுதியில் புறவழிச் சாலை அமைத்துத் தரும்படி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் போக்குவரத்துச் செறிவு அதிகமாக உள்ள இடங்களில் அதைக் குறைப்பதற்காக புறவழிச் சாலைகளை அமைத்து வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற குடியாத்தம் பகுதியில் இருக்கிற போக்குவரத்துச் செறிவைக் கணக்கிட்டு, போக்குவரத்துச் செறிவு அதிகமாக இருக்கின்றபட்சத்திலே நிதிநிலைக்கேற்ப புறவழிச் சாலையை அமைக்க அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 82, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

82—

மின் வாரியப் பிரிவு அலுவலகம்

***868 திரு. ஈ.எம்.ஆர். ராஜா என்கிற கே.ஆர். ராஜாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, பர்கூரில் புதிய மின் வாரியப் பிரிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?